# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை -600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணைநாள் – 05.11.2020**

**முன்னிலை**

**திரு.சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 3953/D/2018**

திரு. ச. முத்துக்குமார் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, சேரன்மகாதேவி, --- பொது அதிகார அமைப்பு
திருநெல்வேலி மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 20.01.2018 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 29.01.2018 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 09.02.2018 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.02.2018 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 30.05.2018 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (05.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திரு. வேல்முருகன், தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் திருநெல்வேலி மாவட்டம், வெள்ளங்குளி, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பியுள்ள மனுவில், 01.06.2015 முதல் 19.01.2018 வரையிலான பள்ளிச் சுற்றறிக்கைப் பதிவேட்டின் நகல், பணியாளருக்கான ஆணைக் குறிப்பேட்டின் நகல், பள்ளியின் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடவேளைகள், பாடங்கள், வகுப்புகள் குறித்த முழு விவரம், பள்ளியில் நடைபெற்ற பருவத் தேர்வுகள் மற்றும்

காலாண்டு, அரையாண்டு உள்ளிட்ட பள்ளியில் நடைபெற்ற தேர்வுப் பணிகளில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வுப்பணி குறித்த விவரம், நகர்வு பதிவேட்டின் நகல், பிறபணிகள் பதிவேட்டின் நகல், கடித அனுப்புகைப் பதிவேட்டின் நகல், உள்ளூர் கடிதப் பட்டுவாடா பதிவேட்டின் நகல், கடித வருகைப் பதிவேட்டின் நகல், உள்ளிட்ட விவரங்களை மொத்தம் ஒன்பது இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.11.2020) தொலைபேசி வாயிலானவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், மனுதாரர் கோரிய தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்க திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி அரசு மேல்நிலைப்பள்ளி, தலைமையசிரிய அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மேலும், இவ்வாணையுடன் மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மற்றும் சட்டப்பிரிவு 19(3) மனுக்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 3953/D/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, சேரன்மகாதேவி,
திருநெல்வேலி மாவட்டம். (இணைப்புடன்) 6(1) & 19(3)

**<u>மனுதாரர்:-</u>**

திரு. ச. முத்துக்குமார்,
எண்.55 அ, பெரியசாமி கோயில் தெரு,
குற்றாலம் சாலை, திருநெல்வேலி நகரம்,
திருநெல்வேலி மாவட்டம் – 627 006.

Copy to: File
DGPC 10.11.2020